**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி PW7**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பால்ராஜ் | தொழில் | : துணிக்கடை வைத்துள்ளேன் |
| தகப்பனார் பெயர் | : முருகன் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 40 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(CMP No.01/2025 மனுவானது கடந்த 24.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை)**
**( 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை பாரதிய குடிமக்கள் சட்டம் பிரிவு 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

<u>1, 2 **குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**</u>

இருவருக்கும் சண்டை ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ? மறு நாள் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடத்தை காட்டும்படி விசாரித்தார்கள். சம்பவம் நடந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் ? எனது வீட்டில் இருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ? ஆமாம், கேள்விப்பட்டு தான் தெரிந்து கொண்டேன்என்றால் ? ஆமாம். போலீசார் விசாரித்த சம்பவ இடத்திலேயே நான் கையெழுத்து செய்தேன். சம்பவம் நடந்த பகுதியானது வாசல் பகுதி என்றால் பெருமாள் வீட்டு வாசலாகும். சம்பவம் நடந்த இடத்தை காவல்துறையினரிடம் சொன்னபோதும் பெருமாள் வீட்டு வாசல் என்று தான் சொன்னேன் என்றால் ? ஆமாம், நான் சொன்னது தவறு என்றாலும் போலீசார் கேட்டதால் நான் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தை காட்டியதாக வழக்கிற்காக வேண்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.02 13:15:22 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**